**செய்தி வெளியீடு எண்:780** **நாள்: 16.11.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (16.11.2017) தலைமைச் செயலகத்தில், புற்றுநோய் சிகிச்சை மேற்கொள்வதற்காக தினகரன் நாளிதழ் புகைப்படக்கலைஞர் திரு.ப. மாதவன் அவர்களிடம், பத்திரிகையாளர் மருத்துவச் செலவிற்கான நிதியுதவி திட்டத்தின் கீழ் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.7.2017 அன்று சட்டப்பேரவை விதி 110–ன் கீழ், பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை 8,000/– ரூபாயிலிருந்து 10,000/– ரூபாயாகவும், அவர்களது குடும்ப ஓய்வூதியத்தை 4,750/– ரூபாயிலிருந்து 5,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காக 20.7.2017 அன்று பத்திரிக்கையாளர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை சந்தித்து தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது, புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் தினகரன் நாளிதழ் புகைப்படக்கலைஞர் திரு.ப. மாதவன் அவர்களின் மருத்துவச் செலவிற்கு உதவும்படி பத்திரிகையாளர்கள் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

பத்திரிகையாளர்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், பத்திரிகையாளர்களின் மருத்துவச் சிகிச்சைக்காக தற்போது பத்திரிகையாளர் மருத்துவச் செலவிற்கான நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் அதிகபட்ச தொகையான 1 லட்சம் ரூபாய் என்பதை தளர்த்தி சிறப்பு நிகழ்வாக புற்றுநோய் சிகிச்சை மேற்கொள்வதற்காக தினகரன் நாளிதழ் புகைப்படக்கலைஞர் திரு.ப. மாதவன் அவர்களுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்க ஆணையிட்டு, இன்று தலைமைச் செயலகத்தில், திரு.ப. மாதவன் அவர்களுக்கு மேற்கண்ட தொகைக்கான காசோலையை வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் திரு. எஸ்.பி. எழிலழகன் மற்றும் திரு.உல. ரவீந்திரன், திரு.மாதவன் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 16.11.2017**